பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
வே. வ. இராமசாமி

வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.

சென்னை-17.

சோபகிருது - கார்த்திகை

விலை : 25 காசு

பொருளடக்கம்

		பக்கம்
1.	வருந்துகிறோம்—(தலையங்கம்)	... 3
2.	சென்னடி மறைவுக்கு இரங்கல்— திரு. வே. வ. இராமசாமி	... 6
3.	தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் திட்டம்	... 7
4.	பனைத்தொழில் வல்லுநருக்கு அம்பர் ராட்டை இனம்	... 8
5.	பனைவெல்ல அச்சு—திரு. கே. சம்பந்தம்	... 9
6.	டில்லியில் காந்தி ஜயந்தி	... 12
7.	பதநீருக்கு துணை ராஷ்டிரபதி பாராட்டு	... 14
8.	மனிதனுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கும் தரு	... 15
9.	பதநீர் இறக்குதல்—திரு. அ. ராஜாமணி	... 19
10.	சங்கச் செய்திகள்	... 21
11.	நீங்கள் கேட்டவை	... 22

ஆண்டுச் சந்தா ரூ. 3

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது௵ கார்த்திகைமீ பாளை 2

வருந்துகிறோம்

உலக சமாதானத்துக்காகப் பாடுபட்டுவந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதைக் கேட்டு பெரிதும் வருந்துகிறோம். அவருடைய பிரிவு ஈடுசெய்யமுடியாதது ஆகும். பெரிய எதிர்ப்பு களிடையே நிறவெறியை அறவே ஒழிக்க பெரும் முயற்சி எடுத்துவந்தார்.

இந்தியாவுக்கு அவர் அளித்துவந்த உதவி கொஞ்ச மல்ல. அவருடைய மறைவு இந்தியாவுக்கு ஒரு பெரு நஷ்டமாகும்.

இவ்வளவு இளம் வயதிலேயே உலகில் புகழ்பெற்று வந்த அமெரிக்க ஜனாதிபதியைச் சுட்டுக் கொன்றது ஓர் ஈனச் செயலாகும்.

அவருடைய மறைவுக்குச் சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஒரு நற்செய்தி

(வே. வ. இராமசாமி)

இந்தியப் பேரரசு 23—12—1947 முதல் பனைவெல்ல உற்பத்தித் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தி உணவு விவசாய இலாகாவின் ஒரு பிரிவாக ஆக்கிப் பணிபுரிந்தது. அன்று முதல் பனைத்தொழில் வளர்ச்சிக்காக மத்திய அரசினர் மாநில அரசுகள் மூலம் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல் படுத்தி வந்தனர். 1948-ம் ஆண்டுத் துவக்கத்தில் தமிழ் நாடு அரசாங்கம் பனைத்தொழில் நுணுக்க போதகர்களை நியமித்து, பனைத்தொழில் நுணுக்கங்களை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்தது. கூட்டுறவு இலாகாவின் கீழ் இவ்வபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுவந்தன. கூட்டுறவு இலாகாவிலிருந்து கைத்தொழில் வர்த்தக இலாகாவுக்கு மாற்றப்பட்ட பின்னர் 1958-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் என்ற பேரமைப்பின் மூலம் தமிழ்நாடு முழுவதும் பனைவெல்ல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் நாட்டில் பனைத்தொழில் வளர்ச்சித் திட்ட வேலைகள் கூட்டுறவு அடிப்படையிலேயே துவக்கப்பட்டதால் இது மென்மேலும் வளர்ந்து வருகிறது. தமிழ் நாட்டில்தான் பனை இன மரங்கள் அதிகம். 4 கோடி பனை மரங்களும், 2 லட்சம் தென்னை மரங்களும், 5 லட்சம் ஈச்ச மரங்களும் உள்ளன. இதில் ஆண்டுதோறும் 32 லட்சம் பனையின மரங்கள் மட்டுமே பதநீர் இறக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் பயன்படுத்தப்பட்டால் நம் நாட்டில் சர்க்கரைத் த்ட்டுப்பாடே வராது. எனவே தான் பனைத்தொழில் வல்லுநர்களின் மரமேறும் திறனை அதிகரிக்கச் செய்வதற்காக 100 மரம் ஏறும் பயிற்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது.

நம் தமிழ் நாட்டில் 1,426 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், 6 மாவட்ட சம்மேளனங்களும், இவைகள் அனைத்துக்கும் மேலாக ஒரு மாநில சம்மேளனமும் உள்ளன. ஆண்டுதோறும் பதநீர் இறக்க 80,000 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டு 1.8 கோடி ரூபாய் பெறுமான 36 லட்சம் மணங்கு பனைவெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 5.25 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பனைவெல்லமும், ரூ. 5,000 பெறுமானமுள்ள பனங்கற்கண்டும் 1960–61-ம் ஆண்டில் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர 37 நாடுகளுக்குப் பனந்தும்பும், அமெரிக்கா முதலிய மேலை நாடுகளுக்குப் பனையோலைப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எனவே இத்தொழில் இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்யப் பட்டால் நமது தேசிய வருவாய் பெருகுவதோடு, அன்னியச் செலாவணி யையும் மிச்சப் படுத்தலாம்.

வளமுள்ள இத்தொழிலை நன்கு அபிவிருத்தி செய்யும் பொருட்டு 1964-65-க்கான பனைவெல்ல அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு கோடியே எண்பத்து மூன்று லட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் அளிக்கப்பட்டுவந்த தொகையைவிட இது பலமடங்கு கூடுத லாகும். இவ்வளவு அதிகமான தொகையை நம் மாநிலத்திற்கு ஒதுக்க உதவிய கதர்–கிராமக் கைத்தொழில் கழகக் காரியதரிசி அவர்களுக்கும், இத்தொகையை அளிக்க முன்வந்துள்ள அகில இந்திய கதர்–கிராமக் கைத்தொழில் குழுவின் பனைவெல்ல ஆலோசகர் அவர்களுக்கும் நாம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்நற்செய்தி பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்குப் பெரிதும் ஊக்கம் அளிக்கும் என நம்புகிறோம். நடப்பு ஆண்டில் பாரத்தில் 33 லட்சம் டன் கரும்பு சீனியை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. இருந்தாலும் 2 லட்சம் டன் பற்றுக்குறையாய் விடும் என்று ஐயுறுகிறது. இந் நிலையில் பனைவெல்ல சங்கங்கள் தனித்தனியாகவும், சீனி ஆலைகள் மூலமும் பனஞ்சீனி தயாரித்து நாட்டின் பற்றுக்குறைய சமாளிக்க தங்களால் இயன்ற வரை பாடுபடும் என்று உறுதி கூறுகிறோம்.

நிலக்கொடை வள்ளல் தென்னிலை திரு. ஷண்முகக் கௌண்டர்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள தென்னிலை எனும் சிற்றூரில் நமது மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் சம்மேளனத்தின் பனந்தும்புக் கிளை நிலையத்தை 18—10—'63-ல் திறந்து வைத்தார்கள். அப்போது அவ்வூரைச் சேர்ந்த நிலக் கிழாரும், கொடை வள்ளலுமான திரு. ஷண்முகக் கௌண்டர் அவர்கள் மாநில சம்மேளனத் திற்கு மூன்று ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளார்கள். மாநில சம்மேளனம் அதன் கிளை நிலையத்தை விரிவுபடுத்தி, பரந்த அளவில் பனந்தும்பு வியாபாரத்தையும், சுத்திகரிப்பு வேலையையும் செய்யும்போது ஏறத்தாழ 35 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பயன்பெற வழியேற்படும் என்ற பெருநோக்கோடு நிலக்கொடை வழங்கிய பரந்த உள்ளம் படைத்த பெரியாரை மனமார வாழ்த்துகிறோம்; அவரது இச்செயல் பிற நிலக் கிழார்களின் உள்ளங்களில் நல்ல மாற்றத்தை உருவாக்கி, பனைமரச் சொந்தக்காரர்கள் பனை மரங்களை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தானமாக வழங்க முன்வருவார்களெனக் கருதுகிறோம்.

அமெரிக்க அதிபர் கென்னடி மறைவு

மாநில சம்மேளனத் தலைவர்

திரு. வே. வ. இராமசாமி அவர்களின் இரங்கல்

அன்று காலை எழுந்தவுடன் அமெரிக்க அதிபர் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை என் பேரன் கூறியதைக் கேட்டு சிலைபோல் ஆனேன்; என் உள்ளம் துக்கத்தால் நிறைந்தது. உலகம் போற்றும் ஒரு மாபெரும் தலைவனை இழந்துவிட்டோம். உலக நாடுகளின் நலனுக்காகவும், சமாதானத்துக்காகவும், கறுப்பர்களின் உரிமைக்காகவும் பாடுபட்ட அவர் உலக மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்டார். இந்தியாவின் நெருங்கிய நண்பராக இருந்து, நம் ஆபத்துக் காலங்களில் பேருதவி புரிந்தார். இந்தியா இன்று உண்மையான ஒரு நண்பனை இழந்த துயரத்தில் மூழ்கியுள்ளது. தைரியமும், செயல்திறனும் கொண்ட அதிபர் கென்னடி, செய்வதைத்தான் சொல்லுவார்; சொல்லியதைச் செய்தும் காட்டுவார். அந்தச் செயல்வீரரை இழந்த குடும்பத்தாருக்கும், அமெரிக்க மக்களுக்கும் பனைவெல்ல உற்பத்தியாளர்களின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

23—11—1963-ல் மதுரையில் நடந்த மாநில சம்மேளன நிர்வாகக் குழுக் கூட்டத்தில், தலைவர் திரு. வே. வ. இராமசாமி ஆற்றிய உரைக்குப்பின் அதிபர் கென்னடி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய பனைவெல்ல தினம்

23–12–1963

எல்லா ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் இந்நாளை விழாவாகக் கொண்டாடி, நாட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பணியில் ஈடுபட உறுதிகொள்ளுவோம். உணவுப் பண்டங்களில் மிக முக்கிய அங்கம்வகிக்கும் பனைவெல்லத்தை இன்னும் அதிக அளவு உற்பத்திசெய்து நாட்டுக்கு உதவ ஊக்கம் குன்றாது உழைத்திடுவோம்! உடலுக்கு ஆரோக்கியம் தரும் பதநீரை அனைவரும் பருக அயராது பாடுபடுவோம் என உறுதிகொள்ளுவோம்!

தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் திட்டம்

(என். சி. எஸ்.)

[தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தம்மிடமுள்ள பனைகளை வீணாக வெட்டுவதில்லை என்று முடிவு செய்துள்ளார். தம் திட்டத்தைப்பற்றி சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசியிடம் அவர்கள் தெரிவித்தார்கள்.]

குன்றக்குடி அடிகளாரை மாநில பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரிய தரிசி அவர்கள் 12—10—'63-ல் நேரில் சந்தித்து, பனைத் தொழில் அபிவிருத்தி பற்றி விவாதித்தபோது அடிகளார் தம்முடைய முயற்சியால் குன்றக்குடியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பனை மரங்களை வெட்டிப் பாழ் படுத்தாதவாறு தடுத்துவிட்டதாகத் தெரி வித்தார். அடிகளாரின் திட்டத்தை ஏற்றுக் கொண்ட குன்றக்குடி, தொழாவூர், சிறுவயல், கொரட்டித்தட்டி, கீழவூர், தட்டட்டி, சிருவயல் ஆகிய கிராம மக்கள் 'பனைகளை இனி வெட்டோம்' என உறுதி பூண்டுள்ளதாக அடிகளார் அவர்கள் கூறி னார்கள். இத்திட்டத்தை மாநிலமெங்கு முள்ள பனை மரச் சொந்தக்காரர்கள் வர வேற்பார்களாயின் தேசிய செல்வம் பாது காக்கப்பட ஏதுவாகும்; பனையை நம்பி வாழ்வோரின் நிலையும் உயரும்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்காகவும், மிகப் பல கிராமங்களிலும்–நகரங்களிலும் செங்கல் சுடுவதற்காகவும் பனை மரங்கள் வெட்டப் பட்டு வருவதால் ஒவ்வொரு வருடமும் பனைத் தொழில் வல்லுநர்கள் பனை மரங் களுக்காகத் தேடியலைந்து, சர்வே நம்பர் களைப் பெற்று பதநீர் இறக்க அனுமதிச் சீட்டுப் பெறவேண்டியதுள்ளது. அடி களாரின் திட்டம் ஏற்கப்பட்டால் இச்சிக்கல் கள் தீர்க்கப்படுவதோடு, ஒவ்வொரு வருட மும் புதுப் புது தோப்புகளை நாடி ஓடி நாடோடிகளாய் வாழவேண்டிய அவல நிலையிலிருந்து பனைத் தொழில் வல்லுநர் கள் விடுபடுவர்; நிரந்தரமாக ஓரிடத்தில் நிலைத்து வாழ வழியும் ஏற்படும். அடி களாரின் திட்டத்தை நாட்டு நலன் கருதி பனை மரச் சொந்தக்காரர்கள் ஏற்பார்கள் எனப் பெரிதும் நம்புகிறோம்.

பனை மரங்களை நட்டு வளர்க்க அடிகளாரின் ஆர்வம்

கீழாயபட்டி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டு தகவல்கள் சேகரிப்பதற்காக மாநில சம் மேளனக் காரியதரிசி அவர்களும், இராம நாதபுரம் மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. T. கோவிந்தராஜுலு B.A., அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடி களாருடன் 12—10—'63-ம் தேதி சென்ற போது, அடிகளார் 5001 பனங்கொட்டை களை நடுவதென முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். சென்ற ஆண்டு நட்ட கொட்டைகள் முளைக்கவில்லை எனவும், எப் பருவத்தில் எந்த முறையில் நடவேண்டும் என்பது பற்றியும் சம்மேளனக் காரியதரிசி அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அடிகளாரின் பனை நடும் திட்டப்படி 5001 பனங்கொட்டைகளை திருநெல்வேலி மாவட்டப் பனைவெல்ல விற்பனைக் கூட் டுறவுச் சங்கத்திடம் பெற்றுக் கொள்ளும்படி காரியதரிசி அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

குழந்தைகள் நலனுக்கு பனங்கற்கண்டு சிறந்தது

பனைத் தொழில் வல்லுநருக்கு அம்பர் ராட்டை இனும்

திருச்சி மாவட்டத்திலுள்ள தென்னிலை யில் பனந்தும்பு பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட இருபது ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் களும், உறுப்பினர்களும் அடங்கிய கூட்டம் 18—10—'63 பிற்பகலில் தென்னிலை விவ சாயக் கூட்டுறவு பாங்கு கட்டிடத்தில் மாநில சம்மேளனத் துணைத் தலைவர் திரு. கே. இராமலிங்கம் B.Com., B.L. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிராமக் கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை இயக்குநர் திரு. T. V. இராமாநுஜன் B.A. அவர்களும், மாநில சம்மேளனக் காரியதரிசி திரு. கே. சம்பந்தம் அவர்களும், திருச்சிராப் பள்ளி மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. செபஸ்தியான் அவர்களும், கூட்டுறவுச் சங்கங்களின் முதுஆய்நர் திரு. சுந்தரேசன், பனைத்தொழில் போதகாசிரியர் திரு. அலெக்சாண்டர் ஆகியோரும் பரமத்தி வட்டார கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரி அவர்களும் கலந்து கொண்டனர்.

ஆரம்பச் சங்கங்களில் உறுப்பினர் களாக உள்ளவர்கள் பனையேற்றுப் பருவ மற்ற காலங்களில் மாற்றுத் தொழில் புரிந்து வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வகை யில் அம்பர் ராட்டையை இனமாக வழங்க ஏற்பாடு செய்வதாக மாநில சம்மேளனத் துணைத் தலைவர் திரு. கே. இராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருமாறும் கேட்டுக் கொண்டார்கள். கரூர் பிராந்தியத் தில் 35 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைத்தாற்போல் இருப்பதால் இவைகளை விரைவில் முன்னேற்றமடையச் செய்ய போதிய வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

புறம்போக்கிலுள்ள பனைகள் நமது உடமையாகவேண்டும்

புறம்போக்கு நிலங்களிலுள்ள பனை களை தனியார் ஏலத்தில் எடுத்து பனைத் தொழில் வல்லுநர்களுக்குக் குத்தகைக்கு விடுகின்றனர். இதனால் நமது தொழிலாளர் கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே புறம் போக்கு நிலங்களிலுள்ள பனை மரங்கள் அனைத்தையும் ஆரம்பச் சங்கங்கள் உரிமை யோடு போராடிப் பெறவேண்டும். பனை ஏறுவோர் நாம். எனவே பனைகளைப் பயன் படுத்தத் தெரிந்த நமக்கே அவை சேர வேண்டும். இதற்கு இவ்வட்டாரத்திலுள்ள முப்பத்தைந்து சங்கங்களும் ஒப்புரவோடு ஒன்றுபட்டு நின்று போராடிப் பெற வேண்டும் என்று திரு. கே. இராமலிங்கம் அவர்கள் மேற்படி கூட்டத்தில் கூறினர்.

ஒரு பனைமரத்தின் ஒரு வருட வருமானம்

	பொருளின் பெயர்		உற்பத்தி அளவு	கிரயம்
1.	பதநீர்	...	181 லிட்டர்	—
2.	பனைவெல்லம்	...	24·5 கிலோ	19·60
3.	பனஞ்சர்க்கரை	...	16·33 ,,	—
4.	பனந்தும்பு	...	1·4 ,,	4·40
5.	ஈர்க்கு	...	2·27 ,,	1·75
6.	விறகு (குலைஞ்சி)	...	6·000 ,,	0·22
7.	ஓலை	...	10 எண்ணிக்கை	1·32
8.	நார் (அகணிநார், புறணிநார்)	...	20 ,,	2·00
				29·29

குறிப்பு:—பதநீரைப் பனைவெல்லமாகவோ, பனஞ்சீனியாகவோ மாற்றுமல் பதநீராகவே விற்றால் ரூ. 60 கிடைக்கும்.

பனைவெல்ல அச்சு

கே. சம்பந்தம்

நம் மாநிலம் முழுதும் உள்ள பனைவெல்ல சங்கங்கள் விதவிதமான பனைவெல்ல அச்சுகளை உபயோகித்து வருகின்றன. உதாரணமாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் பெரிய தேங்காய் செரட்டைகளில் பனைவெல்லப் பாகை ஊற்றி அச்சு வார்க்கின்றனர். அதே மாவட்டத்தில் சங்கரன்கோவில் தாலூகாவில் சிந்தாமணி, இராயகிரி, வாசுதேவநல்லூர் முதலிய சிற்றூர்களிலுள்ள ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறிய செரட்டைகளில் ஊற்றுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரிய கொப்பரைத் தேங்காய்ச் செரட்டைகளை உபயோகிக்கின்றனர்.

சேலம், கோவை மாவட்டங்களில் மரத்தாலோ, மண்ணாலோ செய்யப்பட்ட சதுர அச்சுகளை உபயோகிக்கின்றனர். பொதுப்படையாக சிறிய அச்சுகளில் ஊற்றுவதைப் பொதுமக்கள் அதிகமாய் விரும்புகின்றனர். சில இடங்களில் பூமிக்குள் குழி தோண்டி துணி வைத்து ஊற்றுகின்றனர்.

சதுர அச்சு

மரக்கடைகளில் சதுர அச்சு செய்யப்படுகின்றன. பொதுவாய் வெல்லம் சதுரமாய் ஊற்றுவது சேதாரமடைய மிகவும் ஏதுவாகிறது. மேலும் வெல்லம் அச்சிலிடும்பொழுது சற்று தண்ணீரை தன் உள்ளே வைத்துக் கொள்ளுகிறது. இத்தண்ணீர் அகலமான அச்சுப் பலகையில் ஊற்றப்படும் பொழுது உடனே கீழே விரைவில் இறங்குவதில்லை.

அந்த நீரை விரைவில் உறிஞ்சியிழுக்க கட்டைக்கு இயலாது. ஆனால் கொட்டான்களில் சதுர அச்சுகள் அடுக்கி வைக்க ஏதுவாகிறது.

தண்ணீர் உறிஞ்சாத வைரம் நிறைந்த வாகை மரத்தை அச்சுகள் செய்ய உபயோகிக்கின்றனர்.

மேலும் அச்சுகளின் உள் ஓரங்களை சுத்தமாய்க் கழுவ இயலாது.

செரட்டை அச்சு

தொன்று தொட்டு தேங்காய் செரட்டைகளை நம் வல்லுநர்கள் உபயோகித்து வருகின்றனர். அதைப்பற்றி சற்று பரிசீலனை செய்தால் கீழ்க்கண்ட அனுகூலங்கள் இருப்பது தெரியவரும்.

(1) வாய் அகன்று அடி குறுகியிருப்பதால், வெல்லத்தில் உள்ள நீர்ச்சத்து விரைவில் கீழே இறங்க சாதகமாகிறது. நீர்ச்சத்து சுத்தமாய் எடுபட்டுவிட்டால், வெல்லத்தை அதிக நாள் இருப்பு வைக்கலாம்.

(2) செரட்டை அடியில் துவாரம் இருக்கும். ஆண் செரட்டையானால் துவாரம் போட்டுக் கொள்வார்கள். இத்துவாரத்தை மண் மீது வைத்து ஊற்றும் பொழுது வெல்லத்தில் உள்ள நீர்சத்து இத்துவாரத்தின் மூலம், மணலால் இழுக்கப்படுகிறது.

(3) செரட்டையின் உள்பாகம் இயற்கையாகவே வழ வழப்பாய் இருக்கிறது. வெல்லம் ஊற்றும் பொழுது செரட்டையில் கெட்டுப் பாகம் நல்ல வழவழப்பாக அச்சாகிறது. அச்சிலிருந்து வெல்லம் எடுத்தவுடன் பார்த்தால் அச்சின் மூன்று பாகமும் நல்ல சீராய் இருக்கும். நல்ல வழ வழப்பாய் இருப்பதால் வெளிக் காற்றில் உள்ள ஈரச்சத்தை (Moisture) விரைவில் உறிஞ்சுவதில்லை. எனவே விரைவில் கசிவதுமில்லை. வெல்லம் ஊற்றுமுன் அச்சை தண்ணீரில் போட்டு பின் தான் உபயோகிப்பார்கள். இந்த ஈரம் வெல்லம்

ஊற்றும் பொழுது, சுற்றுப்புறம் பாலிஷாக இருக்க உதவுகிறது.

(4) ஒவ்வொரு செரட்டையும் எடுத்து இலகுவில் தட்டி வெல்லத்தை பிரித்து எடுத்துக் கொள்ளலாம்.

எனினும் செரட்டை அச்சுகளில் ஊற்றும் பொழுது ஒரே எடையுள்ளதாய் அமைவதில்லை.

பொதுவான அச்சு வேண்டும்

மாநில முழுதும் ஒரே உருவமுள்ள அச்சுகளில் வெல்லம் ஊற்றுவது நலம்.

வெல்லத்தின் எடை மிகவும் குறைந்த அளவில் இருக்கவேண்டும். 5 பேர் உள்ள குடும்பத்திற்கு காப்பியில் ஒரு தரம் குறைக்காமல் போடும் அளவுக்கு வெல்லம் இருக்க வேண்டும்.

வெல்லம் பெரிய அளவில் இருக்கும் பொழுது உடைத்து ஒரு பகுதியை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உடைந்த வெல்லம் விரைவில் காற்றில் உள்ள ஈரத்தை உறிஞ்சி, கசிய ஆரம்பிக்கிறது.

சிறிய செரட்டை அச்சுகளில் ஊற்றப்படும் வெல்லம் எங்கும் விரும்பி வாங்கப் படுகிறது. சிறிய செரட்டைகளை ஒரே அளவில் வேண்டிய அளவில் சேகரிப்பது கஷ்டம். எனவே சுட்டமண் அச்சுகளை உபயோகித்தல் நலம்.

சுட்ட மண் அச்சு

மத்திய பனைவெல்ல வழிகாட்டி நிலையம் உடன்குடியில் இயங்கிவந்தபொழுது சுட்ட மண் அச்சுக்களில் வெல்லம் ஊற்றி பரிசீலனை செய்தது. இந்த அச்சை மத்திய பனைவெல்ல ஆராய்ச்சி கூடம் (தஹனு) மேலும் பரிசீலனை செய்து முதலாவது பனைத்தொழில் வல்லுநர் கருத்தரங்கில் (Technical Forum) இதை ஒத்துக்கொண்டனர். இந்த அச்சில் கீழ்க் கண்ட அனுகூலங்கள் உள்ளன.

(1) ஒரே அளவாய் மண் செரட்டை செய்து கொள்ளலாம்.

(2) மண், தண்ணீரை உறிஞ்சுமாதலால் வெல்லம் ஊற்றப்பட்டவுடன், வெல்லத்திலுள்ள ஈரசத்தை உடனே மண் செரட்டை உறிஞ்சி விடுகிறது. வெல்லத்தை சுண்டிப் பார்த்தால்ஈரமில்லாத ஓசை கேட்கிறது.

(3) மண் செரட்டையின் அடியில் ஒரு துவாரம் செய்யவேண்டும். வெல்லத்திலுள்ள முழு ஈரச் சத்தும் துவாரத்தின் வழியாய் மணலுக்குள் இறங்கி விடுகிறது. எனவே வெல்லம் அதிக நாட்களுக்கு வைத்துக் கொள்ள ஏதுவாகிறது.

(4) தேவையான மண் செரட்டைகளை ஆங்காங்குள்ள மண்பாண்ட உற்பத்தியாளர்கள் செய்து கொடுத்து விடுவார்கள்.

(5) விலையும் மிகவும் குறைவு.

(6) பத்திரமாய்ப் பயன்படுத்தினல் மூன்று சீசன் வரை உபயோகிக்கலாம்.

(7) செரட்டையிலிருந்து வெல்லம் எப்படி தட்டினல் விழுந்து விடுகிறதோ அதே மாதிரி மண் அச்சை குப்புற தட்டினல் வெல்லம் தனியாய் வந்துவிடுகிறது.

(8) சிறிய அச்சுகளில் ஊற்றப்படும் வெல்லம் சற்று அதிகமான விலையில் விற்கப் படுவதால், மண் செரட்டைக்கு ஏற்படும் சொற்ப சேதாரம் சரிகட்டிவிடும்.

அச்சிலிடுதல்

எப்பொழுதும் ஒரு சாமான் விற்பனைக்கு வரும்பொழுது, அதனுடைய இறுதியான

இலங்கையில் இந்திய பனைத்தொழில் வல்லுநர்களுக்குக் கிராக்கி

இலங்கையில் இந்தியப் பனைத் தொழில் வல்லுநர்கள் கிடைக்காததால் 2 லட்சம் பனை மரங்களுக்குமேல் பாளை சீவ முடியவில்லை என்றும், இத்தொழிலுக்கு சுமார் 1,000 இந்தியப் பனைத் தொழில் வல்லுநர்கள் தேவைப்படுவதாகவும் தெரிகிறது. மேலும் இந்திய பனைத்தொழில் வல்லுநர்கள் 70 பனை மரங்களுக்குமேல் பாளை சீவும் திறமை வாய்ந்தவர்களென்றும், இலங்கைப் பனைத்தொழில் வல்லுநர்கள் சில மரங்களிலேயே பாளை சீவ முடிகிறதென்றும் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளதாக ஒரு செய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

அளவு, உருவம் அமையும் தன்மையை பொருத்து நல்ல விலையாகிறது என்பதை சொல்லத் தேவையில்லை. நம் வல்லுநர்கள் அதிக சிரமத்துடன் இறக்கும் பதநீரை வெல்ல மாக்கும்பொழுது சில கவனக்குறைவால் மார்க்கெட்டில் நல்ல விலையாவதில்லை.

தற்பொழுது, பனைவெல்லத்தின் ஊட்ட சத்தை உணர்ந்து பனைவெல்லமே சாப்பிடாத வர்கள்கூட உபயோகிக்க ஆரம்பித்து விட்டனர். நல்ல விலையும் இப்பொழுது கிடைக்கிறது. எனவே உற்பத்தி செய்வதில் உள்ள கீழ்க்கண்ட குறைபாடுகளை உடனடி யாக நிவர்த்திக்கவேண்டும்.

(1) பதநீரை முதலில் சுத்தமான துணி யால் வடிக்கட்டிவிட வேண்டும். இந்த சிறு வேலையை நாம் செய்யாதபடியால், தூசு, துரும்பு வெல்லத்தில் சேர்ந்து விடுகிறது. அதனால் வெல்லத்தை சிலர் வெறுக்கின்றனர்.

(2) பதநீர் கொதிக்கும்பொழுது, கூரை யிலிருந்து தூசி, கரி அல்லது எரியும் அடுப்பி லிருந்து சாம்பல் துரும்பு சிதறி விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(3) பாத்திரங்கள், அகப்பை, முதலிய வற்றை சுத்தமான தண்ணீரால் கழுவ வேண்டும்.

(4) கருப்புக் கட்டியை துளாவும் பொழுது காற்றடித்து சாம்பல், மண் இறுதி யான பாகில் விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு விழும் தூசியை வெல்லத் திலிருந்து நீக்க இயலாது.

(5) அகப்பை, குவளை முதலியவற்றை தரையில் வைத்து உடனே உபயோகிக்கும் பொழுது, நம்மை யறியாமலே மண் கலந்து விடுகிறது. பாய், சாக்கு அல்லது துணியை விரித்து அதன் மேல் கரண்டி, அகப்பை முதலியவற்றை உபயோகிக்கவேண்டும்.

(6) அச்சிலிடும்பொழுது மணல்மேடு செய்து, ஈரத் துணியாலோ, அல்லது ஈர சாக்கினலோ, மணல் மேடு முழுவதையும் மூடிவிட வேண்டும். அச்சுகளை, ஈரத்துணி மேல் தான் பரப்பவேண்டும். வெல்லத்தை ஊற்றும்பொழுது, செரட்டை மண்ணுடன் சம்பந்தப்படுவதில்லை. அதே சமயத்தில் வெல் லத்தில் உள்ள ஈரச் சத்தை காய்ந்த மணல் உறிஞ்சி விடுகிறது. இதை ஒவ்வொரு உற் பத்தியாளரும் மறக்கக்கூடாது.

(7) வெல்லம் அச்சிலிடப்பட்டவுடன் உலர்ந்த துணி, அல்லது பாயைக்கொண்டு மூடவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் செரட்டை யின் அடியில் மண் ஒட்டாதபடி ஒரு இலையை வைத்து ஊற்றுகின்றனர். இது நல்ல முறை யாகும். எனவே "கருப்பட்டியிலும் கல் கிடக்கும்" என்ற பழமொழியை "கருப் பட்டியில் கல் இருக்காது" என்று மாற்றி வழங்கும்படி செய்யவேண்டும்.

சளித்த, அல்லது புளித்த பதநீரை நல்ல பதநீருடன் கலந்து காய்ச்சி வெல்லத்தின் தரத்தை கெடுத்துவிடக்கூடாது. இவற்றை மனதில் வைத்து, வரும் பதநீர் பருவ காலத்தில் சுத்தமான வெல்லம் செய்து உண் போரை மகிழ்விப்போமாக.

குறிப்பு: வரும் ஆண்டில், எந்த ஆரம்ப சங்கம், மெம்பர்களில் 20 பேர்களுக்கு சுட்ட மண் அச்சுகளை வழங்கி வெல்லம் உற்பத்தி செய் கிறதோ அந்த சங்கத்திற்கு, அச்சு செய்த செலவை சன்மானமாய் வழங்க மாநில சம்மேளனம் முயற்சிக்கும்.

விசாகையில் உர ஆலை நிறுவ அமெரிக்கரின் உதவி

விசாகப்பட்டினத்தில் நிறுவப்பட இருக்கும் ரசாயன உர உற்பத்தி சாலைக்கு அமெரிக்கா மொத்தம் ரூ. 21 கோடியே 20 லட்சத்துக்குப் பல வளர்ச்சிக் கடன்கள் வழங்குமென்று அமெரிக்க தூதர் செஸ்டர் போல்ஸ் இன்று அறிவித்தார். இந்தியா விலுள்ள மிகப் பெரிய உர உற்பத்திசாலை களில் ஒன்றாகும் இந்த விசாகை உர ஆலை.

புதிய உர ஆலையினால் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன்களுக்கு மேல் உயரும் என்று தூதர் மதிப்பிட்டார். இதனால் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு அந்நியச் செலாவணியில் ஏறத்தாழ ரூ. 10 கோடி மிச்சமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

டில்லியில் காந்தி ஜயந்தி விழா

இந்த ஆண்டில் இந்தியத் தலைநகரில் நடைபெற்ற காந்திஜயந்தி விழா கண் கொள்ளாக் காட்சியாக இருந்ததால் அதன் மகத்துவத்தை நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம். இவ்விழாவையொட்டி நடை பெற்ற கதர், செக்கு எண்ணெய், உற்பத்தி செய்யப்படும் பிரத்தியட்ச காட்சியை நேரில் கண்டுகளிக்க வந்த 4 லட்சத்துக்கும் மேற் பட்ட மக்களின் ஆர்வத்தை அளவிட இயலாது.

இவ்வளவு கோலாகலமாக காந்திஜயந்தி விழா சென்ற செப்டம்பர் மாதம் 29-ந் தேதி முதல் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்றது. செய்தி, வானொலித்துறை அமைச்சர் திரு. சத்தியநாராயண்சின்ஹாவால் இவ்விழா தொடங்கிவைக்கப்பட்டது.

கதர் கிராமக் கைத்தொழில் கமிஷன் ஆதரவில் "ராஷ்டிர நிர்மாணமே கிராமோத் யோக்" (நாட்டு நிர்மாண வேலையில் கதர், கிராமத் தொழில்களின் பங்கு) என்றதொரு கவர்ச்சிகரமான காட்சி சாலை ஒன்று மகோன் னதமாக அமைக்கப்பட்டிருந்தது. இக்காட்சி யைப் பார்க்க வந்த மக்களைப்பற்றி மாதிரியாக ஆராய்ந்ததில் நிமிஷத்துக் குறைந்தது 85 முதல் 90 பேர்களாவது காட்சி சாலையில் நுழைந்து காட்சியைக் களித்திருப்பார்கள் எனலாம். காந்திஜயந்தி நாளான அக்டோபர் மாதம் இரண்டாம் தேதியன்று மாத்திரம் 2·5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இக் காட்சியைக் அக்கரையுடன் காண வந்திருந்தனர்.

டில்லி நிர்வாகத்தின் தொழில்துறையின ரின் ஒத்துழைப்புடன் கதர் உற்பத்தி, செக்கில் எண்ணெய் ஆட்டுவது, தோலைப் பதப்படுத்திப் பாதரட்சைகள் தயாரிப்பதுபற்றிய தொழில் நுட்பங்களை மக்கள் அக்கறையுடன் கவனித் தனர். இக்காட்சியில் கதர்க்குழு, தேல் கனி உத்யோக் சககாரி உத்பாதன் சங்கம் (செக்கு நல்ல எண்ணெய் உற்பத்தி சங்கம், தேரி கிஷன்கஞ்ச், தோல்கள் கூட்டுறவுச் சங்கம், ஆகியவை கலந்துகொண்டன.

காட்சி சாலை

காட்சி சாலை மிகவும் வசீகரமான முத்தாய்ப்புடன் கவர்ச்சிகரமாக இருந்தது. இனி கிராம மறுமலர்ச்சிக்காக சிறு தொழில் களின் பங்கு தேவை என்பதை பல ஓவியங்கள் மூலம் சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது.

பருத்திவிதையைப் பிரித்து பஞ்சை கொட்டைபோட்டு, பட்டைசெய்து நெசவாக்கி துணியாகச் செய்யப்படும்வரையுள்ள தொழில் நுட்பத்தை மக்கள் கியூ வரிசையில் பார்த்து அனுபவித்தது என்றும் மறக்க முடியாது. அதேபோல அம்பர் இராட்டையில் நூற்பதால் அதிக வருவாய் எப்படி சம்பாதிக்க முடியும் என்ற விவரத்தையும் மக்கள் கேட்டுத் தெரிந்துகொண்டு மனநிறைவு அடைந்தனர். மக்களுக்கு அம்பர் இராட்டை விலைக்கு கிடைக்கும் இடமும் தெரிவிக்கப்பட்டதுடன், பயிற்சி அளிக்கப்படுவதுபற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நாட்டுச் செக்கு நல்லெண்ணெயும், பாத ரட்சைகளும், அவைபோன்ற தோல்பொருள் களும் ரூ. 1,500-க்கு விற்பனை செய்யப்பட்டன.

கதர், கிராமத்தொழில்கள் அவசியம் பற்றிய மடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கதர், கிராமத்தொழில்களின் செய்தித்துறை யினரால் மக்களுக்கு வழங்கப்பட்டன.

அம்பர் இராட்டை நூற்புப் போட்டி

அக்டோபர் மாதம் 1-ந்தேதி நடைபெற்ற அம்பர் இராட்டைப் போட்டியில் 8 ஆண் போதகர்கள் கலந்து கொண்டனர். காந்தி ஜயந்தி நாளன்று (அக்டேபர் 2-ந்தேதி) டில்லியிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங் களிலும் இதற்கு முன்னர் பயிற்சி பெற்ற 12 பெண்கள் கலந்து கொண்டார்கள். ஆறு கதிர்கள் கொண்ட அம்பர் இராட்டையில் நான்கு நாட்கள் தொடர்ந்தாற் போல் நூற்பு வேள்வி நடைபெற்றதை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். போதகர்களில் 7½ சிட்டங்கள் நூற்ற ஸ்ரீ படீல்ராஜுக்கு முதற் பரிசு ரூ. 25 வழங்கப்பட்டது. பெண் களில் உயர்ந்த அளவில் 6¼ சிட்டங்கள் நூற்ற திருமதி சாந்தி தேவிக்கு ரொக்கப் பரிசு ரூ. 50

அளிக்கப்பட்டது. இவற்றை திரு. லால் பகதூர் சாஸ்திரி வழங்கினார்.

கதர்க்குழு பந்தலுக்கு விஜயம் செய்தவர்களில், திரு. சத்யநாராயண சின்ஹா, டில்லி மேயர் திரு. நூருதீன் ஆமத், துணை மேயர் திரு. தேஷ்ராஜ் சௌத்ரி, டில்லி தொழில் ஆலோசனைக் கழகத் தலைவர் டாக்டர் யுத்வீர் சிங் ஆகியோர் முக்கியமானவர்கள்.

திரு. சத்யநாராயண சின்ஹா பேசுகையில் தொழில்களை பரவலாக்க வேண்டியதன் அவசியத்தையும், கதரின் முக்கியத்துவத்தையும் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். தேசப்பிதா தாமே அனுஷ்டித்துவந்த சத்தியம், அஹிம்ஸைப் பாதையைப் பின்பற்றும்படி மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளார் என்றும், நேர்மையும், கடுமையான உழைப்பும் மிகவும் முக்கியமானது என்பதை காந்திஜி வலியுறுத்தி வந்தார் என்றும் அவர் கூறினார்.

80 மணி நேர அகண்ட சமூக நூற்பு வேள்வி அக்டோபர் மாதம் 2-ந்தேதி நள்ளிரவு 12 மணியுடன் முடிவுற்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட சம்மேளனம் பதிவு செய்யப்பட்டுவிட்டது

திரு. T. V. இராமநுஜன் அறிவிப்பு

தென்னிலையில் பனந்தும்பு பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் 18—10—'63-ல் சொற்பொழிவு நிகழ்த்திய கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை இயக்குநர் திரு. T. V. இராமநுஜன் B.A., அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட சம்மேளனம் நிறுவ வேண்டுமென நெடுநாளாகக் கோரிவந்த கோரிக்கை நிறைவேற்றப் பட்டு விட்டது எனவும், ஐப்பசி மாதத்தில் இதன் தொடக்க விழாவை வைத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்கள்.

பனைத் தொழில் தந்தை திரு. வே. வ. இராமசாமி அவர்களின் அறைகூவல்

தென்னிலையில் 18—10—'63 ல் பனந்தும்பு பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் பனைத் தொழிலாளர் பெருமக்களிடையே விழிப்புணர்ச்சியும், ஒற்றுமையும் ஏற்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்கள். மாநில கதர்—கிராமக் கைத்தொழில் கழகத்தார் பல லட்சக்கணக்கான பணத்தைப் பனைத் தொழில் அபிவிருத்திக்காகச் செலவிட்ட போதிலும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், இதற்கு பனைத் தொழிலாளர் பெருமக்களிடையே உள்ள ஒற்றுமைக் குறைவே காரணம் என்றும் கூறினார்கள். திட்டங்களின் நலன்களைப் பெறவும், நல்ல முறையில் திட்டங்களைச் செயல் படுத்தி வெற்றி பெறவும் இது தடையாக உள்ளது என்றும் பனைத் தொழில் வல்லுநர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தம்முடன் ஒத்துழைத்துத் தம் கரத்தை வலுப்படுத்தினால் தாம் முழு மூச்சுடன் பாடுபடமுடியும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இந்த அறைகூவலை நாடெங்கும் உள்ள லட்சோப லட்சம் பனைத் தொழிலாளர் பெருமக்கள் ஏற்பார்களாயின் விரைந்து முன்னேற நல்வாய்ப்பு ஏற்படும்.

பதநீருக்குத் துணை-ராஷ்டிரபதி பாராட்டு

தமக்கு அளிக்கப்பட்ட நீராவை அருந்தியதில் அது இனிப்பாகவும், ருசிகரமாகவும் இருந்ததாகக் குடியரசுத் துணை ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் தெரிவித்தார். கோவை மாவட்டத்தில் நஞ்சுண்டாபுரம் தென்னை வெல்ல வழிகாட்டி மாதிரி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்ற ஜூலை மாதம் 4-ந் தேதியன்று அவர் விஜயம் செய்தார். அப்போது அவ்வமயம் பதநீர் அவருக்கு வழங்கப்பட்டது.

சென்ற 4—7—1963 காலையில் கோயம்புத்தூரில் நடைபெறும் மத்தியக் கரும்பு வளர்ப்புப் பண்ணைக்கு அதிகாரபூர்வமாக குடியரசுத் துணை-ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் விஜயம் செய்தார். அப்பண்ணையின் முக்கிய கட்டிடத்துக்குள் ஒரு தென்னை வெல்லக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பண்ணையுடன் இணைந்து, தென்னையிலிருந்து சிக்கனமாக பதநீர் இறக்குவதற்கான பரிசோதனைகள் நஞ்சுண்டாபுரத்திலுள்ள தென்னை வெல்ல வழிகாட்டி மாதிரி நிலையத்தாரால் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையத்தின் மேற்பார்வையாளர் திரு. எஸ். தல்வார் துணை ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேனை வரவேற்று தென்னை வெல்லத் தொழில் பற்றிய முழு விவரத்தையும் கூறினர். இக்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள், விளக்கப் படங்கள் முதலியன வெகு அழகான முறையில் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றைத் துணை ராஷ்டிரபதி 15 நிமிஷங்கள் வரை அக்கறையுடன் கூர்ந்து கவனித்தார்.

துணை ராஷ்டிரபதி இக் காட்சிசாலையில் பதநீர் அருந்தியது ஒரு சிறப்பான அம்சம் ஆகும்.

நீராவை அருந்தியதும், "நேர்த்தியானது; மிகவும் ருசிகரமானதாக இருக்கிறது" என்று அவர் தெரிவித்தார். பாலிதீன் பாட்டிலில் அளிக்கப்பட்ட 200 மிலிலிட்டரை முழுதும் அவர் சுவையுடன் அருந்தினர்.

முன்னோடி நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புஸ்தகத்தில் கீழ்க்கண்டவாறு அவர் எழுதினர்:—

> "கோயம்புத்தூர் மத்திய தென்னை வெல்ல முன்னோடி மாதிரி ஆராய்ச்சி நிலையத்துக்கு விஜயம் செய்வதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இங்கு பயனுள்ள வேலை நடைபெற்று வருவதாகத் தோன்றுகிறது. எனக்கு அன்புடன் அளிக்கப்பட்ட சுவையான பதநீரை அருந்தி மகிழ்ச்சி அடைந்தேன்."

தென்னஞ் சீனி, கற்கண்டு, சாக்கலேட்டுகள் துணை ராஷ்டிரபதிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இன்னும் தென்னை வெல்லத் தொழில் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய நூல்களும், பிரசுரங்களும் அவரிடம் அளிக்கப்பட்டன.

கிராமப் புறங்களிலுள்ள மக்கள், பனைவெல்லம், பனஞ்சீனி உற்பத்தி செய்வதை ஒரு சிறந்த குறிக்கோளாக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். முதலாவதாக, நம்முடைய சர்க்கரைத் தேவை வெகு துரிதமாக அதிகரித்து வருகிறது. இதைத் தவிர்க்கக் கண்டிப்பாக நாம் பதநீரிலிருந்து பனைவெல்லம் செய்யவேண்டும். இரண்டாவதாகக் கரும்பு பயிரிடப்படும் வளமான நிலங்கள், உணவுத் தானியம் பயிரிடப்படும் பொருட்டு விடுவிக்கப்படவேண்டியதிருக்கிறது.

—டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்.

மனிதனுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கும் தரு

இயற்கை வளம் பொருந்திய நாடு நமது பரதக் கண்டம். இப்பொழுது நமது நாட்டில் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. இம்மாதிரியான அபிவிருத்திக்கு இயற்கை வளங்களை நாம் பயன்படுத்த வேண்டியது அவசியம். புராதன காலந்தொட்டு மனித இனத்துக்கு வெல்லம், சர்க்கரை போன்ற இனிப்புப் பதார்த்தங்களை வழங்கி வரும் சாதனமாக அமைந்துள்ளது பனை இனம். இவை இனிப்புப் பதார்த்தங்களை அளிப்பதுடன் மட்டுமின்றி மக்களின் அன்றாடத் தேவைக்கு வேண்டிய இதர பொருள்களையும் கொடுத்து வருகின்றது. அதாவது மனித இனத்தின் தேவைகளை அள்ளி அள்ளி வழங்குவதற்குரிய இயற்கையின் அன்பளிப்பாக பனை இனம் திகழுகிறது.

உஷ்ணப் பிரதேசங்களில்தான் இவை அபரிமிதமாக வளருகின்றன. உலகில் 44 டிகிரி தென் அட்சர ரேகையிலிருந்து 55 டிகிரி வடக்கு அட்சர ரேகை வரை உள்ள உஷ்ணப் பிரதேசங்களில் இவை உண்டாகின்றன. பெல்ஜியன் காங்கோ, பர்மா, இந்தோசீனு, இந்தோனேஷியா, மலேயா ஆகிய நாடுகளில் பனைப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் பனை மரம்

பனை மரம் இந்தியாவின் இயற்கைச் செல்வம் ஆகும். சர்க்கரைக்கு பதிலாக வேறு வகை இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்து வழங்க நல்ல எதிர்காலம் உள்ளது. கிட்டத்தட்ட இந்தியாவில் 10 கோடி பனைச் சாதி மரங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றில் உடனடியாக 8 கோடி மரங்களில் பதநீர் இறக்கலாம். நம் நாட்டில் சர்க்கரையை அளிக்கக்கூடிய நான்கு வகை மரங்கள் உள. அவை யாவன :—

1. **பனை மரம்:** வெல்லமும் சர்க்கரையும் அளிக்கும் சக்தி வாய்ந்தது பனை மரம் என்பது புகழ் பெற்றது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, சென்னை, வங்காளத்தில் ஒரு பகுதி, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய ராஜ்யங்களில் பதநீரிலிருந்து பனைவெல்லமும் சர்க்கரையும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2. **ஈந்து:** வங்காளத்தில் இம்மரத்திலிருந்து புராதன காலந்தொட்டு வெல்லமும், சர்க்கரையும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது இந்தியாவின் எல்லைப் பகுதிகளிலும் உற்பத்தியாகின்றது.

3. **தென்னை:** சென்னை, கேரளம், மைசூர் ஆகிய பிரதேசங்களில் இம்மரத்திலிருந்து, வெல்லமும், சர்க்கரை முதலியன செய்யப்படுகின்றன.

4. **உதிலி:** அஸ்ஸாமின் மேற்குப் பகுதியிலும், கேரளத்திலும் உதிலிப் பனைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. கேரளத்தில் வெல்லம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

நமது மூதாதையர்களுக்கு 17-ம் நூற்றுண்டில்தான் பனை மரத்திலிருந்து வெல்ல உற்பத்தி செய்யத் தெரியும். 1837-ஆம் வருஷத்தில் வங்காளத்தில் பர்துவானுக்கு அருகே டோபா என்ற இடத்தில் பிளேக் என்பவர் பனையிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்வதற்காக முதன் முதலாவதாக ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினர். இதன் மூலம் நமது நாட்டில் முதலாவதாக இம்மாதிரியான தொழிற்சாலை ஆரம்பமாயிற்று. 1920-ஆம் வருஷத்தில் பனை மரத்திலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்வதைப்பற்றி இந்திய சர்க்கரைக் குழு ஆராய்ந்தது. இத்தொழிலை அபிவிருத்தி செய்தால் இந்தியாவில் சர்க்கரை வினியோகத்திற்கு இது ஒரு சாதனமாக இயங்கும் என்று இக்குழு ஆலோசனை கூறியது. போதிய ஊக்கமும், விஞ்ஞான ஆராய்ச்சியும் இல்லாதது இத்தொழில் நசிப்பதற்கு ஒரு காரணமாக இருந்தது.

இத்தொழிலுக்கு அண்மையில் ஊக்கம் அளித்தவர் மகாத்மா காந்தியாகும். பின்னர் அமைந்த தேசிய சர்க்காரின் விவசாய அமைச்சுத் துறையினர் இத்தொழிலை வளரச் செய்வதற்கு ஆக்கம் அளித்துள்ளனர். இப்பொழுது பனைவெல்ல உற்பத்தித் தொழில், கதர், கிராமத் தொழில் குழுவின் மேற்பார்வையில் வளர்ச்சி அடைந்துவருகிறது.

பருவ காலம்

பூப்பூக்கும் காலத்தில் பனை, தென்னை, உதிலி ஆகிய மரங்களில் பாளைகள் வெளிவருகின்றன.

ஆண் பனைகளில் டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரையிலும், பெண் பனைகளில் பிப்ரவரியிலும், மார்ச்சிலும் பாளைகள் வெளி வரும். முதலில் ஆண் பனைமரங்களில் கிட்டத் தட்ட இரண்டு மாதங்கள் வரை பதநீர் இறக்கி விட்டு, பருவகாலம் முடியும் வரை பெண் பனைகளில் பதநீர் இறக்கி வருகின்றனர். மொத்தம் 6 அல்லது 7 மாதங்கள் வரை பதநீர் பருவகாலம் நீடிக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 12 பாளைகளை ஒரு தென்னை மரம் வீசுகிறது. ஒரு மாதம் வரை ஒரு பாளையில் பதநீர் இறக்கலாம். ஆண்டு முழுதும் தென்னை மரத்தில் பாளை சீவி பதநீர் இறக்க முடியும்.

இதேபோலவேதான் உதிலிப் பனை விஷயத்தில் முதலாவது பூக்கும் காலத்திலே மரத்தின் வளர்ச்சி தடைப்பட்டு விடுகிறது. அதுமுதற்கொண்டு அந்த மரத்தில் சேமிக்கப் பட்டுள்ள பாளைகளை வெளியிடுகிறது. இதன் பாளைகள் 5 முதல் 8 அடி நீளம்வரை இருக்கும்.

இதர மரங்களைப் போலல்லாமல், உதிலி பனையின் உடல் பகுதியிலேயே பதநீர் இறக்க சீவப்படுகிறது. மாரிக்காலத்தில் இதன் பருவ காலம் தொடங்குகிறது. 8 மாத பருவ காலத் தில் இரண்டு வகை மரங்களில் பதநீர் இறக்க முடியும்.

மரம் ஏறி பாளை சீவி பதநீர் இறக்குதல்

பனைகளிலிருந்து பதநீர் இறக்குவதற்கு முன் பாளைகள் சீவப்படவேண்டும். இத் தொழிலைச் செய்வோர் பதநீர் இறக்குபவர். பல நூற்றுண்டுகளாக நமது நாட்டில் இப்பழக்கம் நடைமுறையில் இருந்துவருகிறது. பனை இன மரத்துக்குத் தக்கபடி கருவிகளும், முறை களும் மாறுபட்டிருக்கின்றன. ஒரே வகை இனத்தில் பதநீர் இறக்குவதற்கு பல ராஜ்யங் களுக்கிடையே மாறுபாடு உள்ளது. உதாரண மாக ஈந்தப் பனை பாளையிலிருந்து பதநீர் இறக் கும் முறை குஜராத், கர்நாடகம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் மூன்று விதமானவை.

பதநீர் இறக்க, ஒரு நாளைக்கு ஒரு தொழி லாளர் குறைந்தது 2 தடவைகள் ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. பதநீர் இறக்க பல முறைகள் இருப்பதுபோல், பனை ஏறுவதிலும் மாநிலங்களுக்கு மாநிலம் மாறுபாடுகள் உள. வழக்கமான முறையைக் கையாண்டால் ஈந்தப் பனைகளில் நாள் ஒன்றுக்கு 30 மரங்கள் ஏறி இறங்கலாம். ஆனால் மற்ற வகை மரங் களில் ஏறி இறங்கும் முறைகளின் காரணமாக விபத்து ஏற்படாமல் இருக்க முடியாது; மரம் ஏறிகளுக்கு அதிக சிரமும் கஷ்டமும் ஏற்படா மல் இருக்காது.

கயிறுப் பாலங்கள்

தொழிலாளர்கள் ஒவ்வொரு மரமாக ஏறி இறங்குவதிலுள்ள கஷ்டத்தைப் போக்கி அவர் களுடைய தொழில் திறனை மேம்பாடு அடைய செய்வதற்காக, மரம் ஏறும் முறைகளில் சீர் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பனை மரங் களையும், தென்னை மரங்களையும் கடப்பதற்கு கயிற்றுப் பாலமும், ஈந்தப் பனைகளைக் கடப் பதற்கு மூங்கில் பாலங்களும் உபயோகப் படுத்தப்படுகின்றன. இவை புதிய முறைகள்.

ஒரு கூட்டத்திலுள்ள பனைகளையோ, அல் லது தென்னைகளையோ இணைத்து வடக்கயிறு களால் கட்டிக் கயிற்றுப் பாலம் அமைக்கப்படு கிறது. மரங்களின் உயரப் பகுதியில் ஒரு வடமும், மரத்தின் கொண்டையில் ஒரு கயிறும் கட்டி பல மரங்கள் இணைக்கப்படும். இவ்விரு கயிறுகளும் ஒன்றுக்கொன்று நேர் எதிராகக் கட்டவேண்டும். அப்படியானால்தான் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குக் கீழே இறங்காமல், கயிற்றின் மூலமாகச் செல்ல முடியும். முதலாவது ஏறும் மரத்தில் ஒரு மூங்கில் ஏணியும், கடைசியாக இறங்கும் மரத்தில் ஒரு மூங்கில் ஏணியும் சாத்தி வைக்க வேண்டும். இதன் வழியாக பதநீர் இறக்கும் தொழிலாளர் முதல் மரத்தில் ஏறி, ஒவ்வொரு மரமாக தனது வேலையை முடித்துவிட்டு கயிற் றின் மூலம் பல மரங்களைக் கடந்து கடைசியாக வுள்ள மரத்தின் வழியாக இறங்க வசதி உண்டு. ஈந்தப்பனைகளில் பதநீர் இறக்கு வதற்கு வடக்கயிறுக்குப் பதிலாக கனத்த மூங்கில்கள் பயன்படுத்தப்படும். 15 முதல் 20 அடி தூரத்திலுள்ள பனைகள் கயிற்றாலோ அல்லது மூங்கிலாலோ இணைக்கப்படலாம். இவற்றிற்குத் தேவையான பொருள்கள் கிராமப் பகுதிகளிலேயே கிடைக்கும். மரமேறி களே, தங்கள் ஓய்வு நேரங்களில் கயிறுகளைத் தயார் செய்து கொள்ளலாம்.

இப்புது முறைகளைக் கையாளுவதால், ஒரு தொழிலாளர் 30 முதல் 100 ஈந்தப் பனைகளில் பதநீர் இறக்கி தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது. சில இடங்களில் 130 மரங் களில் பதநீர் இறக்க முடிகிறது. பனை

மரங்களாகில், ஒருவர் 20 முதல் 50 பனைகளில் பதநீர் இறக்க முடிகிறது; சில இடங்களில் 50-க்கும் மேற்பட்ட பனைகளில்கூட பதநீர் இறக்குகின்றனர்.

பாளை சீவுவதில் புது முறைகள்

பாளை சீவுவதிலும் பல புதிய முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக ஈந்தப் பனை சம்பந்தமாக வங்காளத்தில் கையாளப்படுவது போல, ஒரு பாளை சீவப்பட்ட பிறகு அதற்கு இரண்டு நாட்கள் ஓய்வு கொடுத்துவிட்டு நான்காவது நாள்தான் மறுபடியும் பதநீர் இறக்குவதற்காக அது (பாளை) சீவப்படுகிறது. இந்த நடைமுறை ஏற்பாட்டின் காரணமாக நாள் ஒன்றுக்கு உதாரணமாக 30 மரங்களைச் சீவக்கூடிய ஒரு தொழிலாளர் பருவ காலம் முழுதுக்கும் 90 மரங்களை சீவி பதநீர் இறக்க வேண்டியிருக்கும்.

வங்காள முறையில் செய்யப்பட்ட புது மாறுதலுக்கு 'தைனிக் சேதனம்' (நாள் தோறும் சீவுதல்) என்று பெயர். ஈந்தப் பனைக் கொண்டையின் அடிபாகத்தில் உள்ள பகுதி வெட்டப்பட்டு இளமையான பகுதி சீவாமல் விட்டு விடப் படுகிறது. வெட்டப்பட்ட பகுதி 'அ', 'ஆ', 'இ' என்று மூன்று பாகங்களில் ஒரு நாள் 'அ' பாகம் சீவி பதநீர் இறக்கப் படுகிறது. மறுநாள் 'ஆ' பாகமும், மூன்ருவது நாள் 'இ' பாகமும் சீவப்படும். இந்த முறையினுல் இரண்டு மரங்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டியதில்லை; அதற்குப் பதிலாக சீவப் பட்ட பகுதிக்கு ஓய்வு கொடுத்து விடுவார். அதனுல் மரத்துக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையும் குறைகிறது.

மேலும் சீர்திருத்தங்கள் பற்றி திட்டமிடப் பட்டு வருகிறது. தொழில் திறனை மேம்பாடு அடையச் செய்வதற்காக சுகாதார ரீதியில் பதநீர் சேகரிக்கவும், Vacuum Tapping-க் காகவும் ஆராயப்பட்டு வருகிறது.

பனை, தென்னை, ஈந்தப் பனை ஆகிய வற்றில் ஏறி பூம்பாளையை சீவிய பின் அதிலி ருந்து சொட்டுச் சொட்டாக விழும் இனிப்பு திராவகத்துக்கு பதநீர் என்று பெயர். ஆனுல் ஈந்தப் பனையில் பதநீர் கொண்டையின் அடியி லிருந்து இறக்கப் படுகிறது.

உணவுப் பொருள்கள்

பதநீர்: இனிப்புப் பானகமான பதநீர், உணவுச் சத்துள்ளதாகவும், மருந்துக் குண முள்ளதாகவும் கருதப் படுவதால் மக்கள் எல்லோரும் விரும்பிப் பருகத் தொடங்கி விட்டார்கள். பள்ளிச் சிருர்களின் உடல் நலத்தைப்பற்றிச் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் கீழ்க்கண்ட சத்துக்கள் இருப்பதாக பம்பாய் விஞ்ஞானக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் (திருமதி) கமலா சொஹோனி கண்டுப் பிடித் திருக்கிருர்.

எட்டு அவுன்ஸ் பதநீரில் கீழ்க்கண்டவாறு உணவுச் சத்துக்கள் உள.

1.	PH ...	7·2
2.	மொத்த சர்க்கரை (கிராம்).	28·8
3.	கால்ஸியம் (மிலிகிராம்) ...	35·4
4.	இரும்பு (மிலிகிராம்) ...	5·5
5.	பாஸ்பரஸ் (மிலிகிராம்) ...	32·4
6.	தியாமின் (மிலிகிராம்) ...	82·3
7.	ரிபோபிளேவின் (மிலிகிராம்)	44.4
8.	அஸ்கார்பிக் அமிலம் ,, ...	12·2
9.	ரிகோடினிக் அமிலம் ,, ...	674·1
10.	புரோடீன் ...	49·7
11.	கலோரி ...	113·3

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பத நீருக்குக் கிராக்கி இருந்தபோதிலும், அநேக இடங்களில் அதை விற்பனை செய்யவேண்டி யிருக்கிறது. விற்பனை விவரத்திலிருந்து, பத நீரை ஏராளமான மக்கள் விரும்புகின்றனர் என்பது தெரியவரும்; ஆனுல் சில மாநிலங் களில் இத்தொழிலில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

1. ஒருவர் இத்தனை மரங்கள்தான் ஏற வேண்டுமென்ற கட்டுப்பாடு.

2. பதநீர் விற்பனைக்காகவுள்ள மரங் களுக்கு மரத் தீர்வை கூடுதலாகும்.

3. பதநீர் விற்பனை மீது கட்டுப்பாடு.

பதநீர் விற்பனை

(லட்ச காலன்கள் கணக்கில்)

1956-57	1957-58	1958-59	1959-60	1960-61	1961-62
9·64	20·49	43·31	38·97	50·47	37·99

பனைவெல்லம் தயாரிப்பு

பதநீரைக் காய்ச்சி பனைவெல்லம் உற்பத்தி செய்யும் தொழில் நமது நாட்டில் மிகவும் பழமையான தொழில் ஆகும். சென்னை, ஆந்திரா, வங்காளம் ஆகிய மாநிலங்களில் பனைவெல்லம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதை வழக்கமாக மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இம்மாநிலங்களில் வணிகச் சந்தையும் உள்ளது. இந்த நாட்டில் மது விலக்கை நடைமுறையில் கொண்டுவரப்படும் வரை பனைவெல்லத்திலிருந்து பாரி கம்பெனியார் சர்க்கரை உற்பத்தி செய்து வந்தார்கள்.

புதுமுறை வெல்லம் தயாரிப்பதற்கு சுண்ணாம்பு கலந்த பதநீர் தேவை. முதலில் அதை இலேசாகச் சுடப்பண்ணவேண்டும். பின்னர் அதில் சேர்க்கப்பட்ட சுண்ணாம்பையும் இதர அசுத்தங்களையும் போக்குவதற்காக சூபர் பாஸ்பேட், அல்லது பாஸ்பரிக் அமிலத்தைக் கலந்து காய்ச்சவேண்டும். இதன் மூலம் தெளிவாகக் கிடைத்த பதநீரை 116 முதல் 118 டிகிரி சென்டிகிரேட் வரைக் காய்ச்சி பல வித அச்சுக்களில் ஊற்றவேண்டும். இம் மாதிரி தயாரிக்கப்பட்ட பனை வெல்லத்துக்கும் அப்பொழுதுதான் இறக்கப்பட்ட பதநீருக்கும் உண்டான குணங்கள் உண்டு. நாவிற்கு ருசிகரமாக இருப்பதுடன் நல்ல நிறமுடையதாகவும் இருக்கும்.

சென்னை மாநிலத்தில் குன்னூரிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த உணவுச் சத்து ஆராய்ச்சி இயக்குநர், பனைவெல்லத்தைப் பரிசோதனை செய்ததில் வைட்டமின் சத்துக்கள் கீழே குறிப்பிட்ட அளவில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது:

கரோடீன் (புரோ வைட்டமின்)		(100 கி.)	
தயாமீன் (வைட்டமின் பி)	21 மி.கி.	,,	
ரிபோபிளேவின் (வைட்டமின் பி—2)	432	,,	,,
நிகோடினிக் அமிலம் (Anti-to Pallagra Vitamin)	5·24	,,	,,
அஸ்கோர்பிக் அமிலம் (Vitamin C)	11	,,	,,

சில நோய்களைக் குணப்படுத்துவதற்கு பனைவெல்லம் பயன்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. டைபாயிட் ஜுரம் ஆரம்ப காலத்திலும், அது முற்றின காலத்திலும் பனைவெல்லக் கஷாயம் மிகவும் சிறந்தது என்று நாகர்கோயில் திரு. டாக்டர் நாயுடு எல். ஆர். ஸி. பி. எஸ். கூறுகிறார். கரும்புச் சர்க்கரை, குளுகோஸ், டெக்ஸ்ட்ராஸால் இவற்றிற்குப் பதிலாகப் பனைவெல்லத்தை அவர் உபயோகப்படுத்தி வெற்றி அடைந்துள்ளார். இதை புது டில்லியிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகச் செயலாளர் திரு. டாக்டர் சி. டி. பண்டிட், எம்.பி., பி.எஸ்., பிஎச்.டி., டி.பி.எச்., எப்.என்.ஐ. அங்கீகரித்துள்ளார்.

உணவுடன் பனைவெல்லமும், வேர்க்கடலைப் பொருள்களும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வந்தன. அதனால் ஊக்கமளிக்கக்கூடிய நல்ல பயன்கள் ஏற்பட்டிருப்பதாக பம்பாய் விஞ்ஞானக் கழகப் பேராசிரியரும், பையோ கெமிஸ்டிரி இலாகா தலைவருமான டாக்டர் (திருமதி) கமலா சொஹோனி கூறினார்.

கடந்த பல ஆண்டுகளில் நம் நாட்டில் உற்பத்தியான பனைவெல்லம் பற்றிய விவரம் வருமாறு:—

(வங்காள மணங்குகள் லட்சக் கணக்கில்)

1956–57	1957–58	1958–59	1959–60	1960–61	1961–62
22·48	18·99	19·78	21·09	21·14	17·08

கிட்டத்தட்ட கரும்பு வெல்லத்தின் விலைக்கு சமமாக பனைவெல்லம் விற்பனையாகிறது. சில இடங்களில் பனைவெல்லம் நல்ல ரகமாக இருந்தால், கரும்பு வெல்லத்தைக் காட்டிலும் கூடுதலான விலைக்கு விற்கப்படுகிறது.

[தொடரும்]

மதுவருந்தும் தீய பழக்கத்தைப் போக்கும் பிரச்சினையுடன் பனைவெல்ல உற்பத்தி நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

—ராஜாஜி.

பதநீர் இறக்குதல்

அ. ராஜாமணி,
தலைவர், கடையம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

நெல்லை மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகம். பதநீர் இறக்குவது பிப்ரவரியில் ஆரம்பித்து ஆகஸ்டு மாதம் முடியும். மற்ற மாதங்களில் இத்தொழில் செய்வோருக்கு வேலை கிடையாது. தங்களுக்குச் சொந்த மாகவுள்ள பனைகளில் தாங்களே பதநீர் இறக்குவோர் ஒரு சிலர்தான். மற்றவர்கள் பனைகளைக் குத்தகைக்கு எடுக்கிறார்கள். ஒரு பனைக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் என்று குத்தகை இருக்கிறது. சில தன வந்தர்கள் தங்கள் பனைகளில் பதநீர் இறக்க குமரி மாவட்டத்திலிருந்து, ஆட்களை மாதச் சம்பளத்துக்கு அமர்த்துகிறார்கள்.

பதநீர் இறக்கும் தொழில் உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் தொழில். கரணம் தப்பினால் மரணம் தான். இடி மின்னலுடன் பெருமழை பெய்யும்பொழுதும் பேய்க் காற்று, சூறாவளிக் காற்று அடிக்கும் பொழுதும் பனையிலிருப்பவர் படும்பாடு சொல்லும் தரமல்ல. பனைமரம் ஈரமாயிருந் தால் ஈரம் உலரும் வரை பனையில் ஏற முடியாது. வெயில் காலத்திலோ பனை மரத் தில் உஷ்ணம் ஏறி, பனையேறுபவர்க்குக் கஷ்டம் உண்டாகும். பெருமழையால் பாளை சீவ முடியாமல் விட்டு விட்டாலோ அந்த வருடத் தொழில் அதோடு முற்றுப்பெறும். பனையேறுபவர் தினமும் காலையிலும், மாலை யிலும் இரண்டு தடவை ஏறி இறங்க வேண்டும். அதை விட்டு வேறு எங்கும் போகமுடியாது. குடும்பங்களில் நிகழும் நன்மை, தீமைக் காரியங்களுக்கும் போக முடியாது. இரண்டு நாட்கள் சுகமில்லாமல் படுத்துக்கொண்டால் மறுபடி பாளை சீவிப் பதநீர் இறக்கமுடியாது.

பதநீர் இறக்குபவர்க்கு அவர் குடும்பம் முழுதும் உதவவேண்டும். பதநீர் சுமக்க ஒரு ஆள், விறகு சேகரிக்க ஒரு ஆள், பதநீர் காய்ச்ச ஒரு ஆள், அவர் குழந்தை களைப் பார்த்துக்கொள்ள ஒரு ஆள் தேவைப் படுகிறது. உடல் வருந்த உழைத்து, பட்ட கடனைத் தீர்ப்பதற்காக உற்பத்தி செய்த பனைவெல்லத்தை வியாபாரிகளுக்குக் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படுகிறார்கள். பத நீர் இறக்க ஆரம்பிக்கும்போதே பத்து கிலோ கொண்ட கொட்டான் ஒன்றுக்கு ரூபாய் மூன்று அல்லது நான்கு முன்பணமாகக் கொடுக்கிறார்கள். கொட்டான் எட்டு ரூபாய் விலையாயிருந்தாலும் முன் கொடுத்த ரேட் டுக்கு ஒப்புகொண்டபடி பனைவெல்லத்தைக் கொடுக்க வேண்டும். பனையேறுபவர்கள் எப்போதும் இக்கட்டான நிலையில் தானிருக் கிறார்கள் என்பதைப் படம்பிடித்தாற்போல் பனைகுடி மகாநாட்டில் சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பண வசதி யளித்து அவர்கள் பனைவெல்லம் கொள் முதல் செய்தால் பலன் உண்டு.

பெரிய ஊர்களில் பதநீர்க் கடைகள் திறக்கவேண்டும்; புட்டிகளில் அடைத்து நாகரிகமுறையில் விற்பனை செய்யவேண்டும். பானைகளில் வைத்துக்கொண்டு தெருத் தெருவாய் அலைந்து விற்கும் நிலை மாற வேண்டும். பதநீர் இறக்கும் தொழில் இழி வாகக் கருதப்படுகிறது. அதைச் செய்யும் மக்களையும் தாழ்ந்தவர்களாக மற்றவர்கள் நினைக்கிறார்கள். இந்த நிலைமாற நமது சம்மேளனத் தலைவர் செய்து வரும் காரியங் களுக்கு யாவரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். பனையேறுபவர்கள் தவறி விழுந்து கை, கால் ஊனமடைந்து விட்டால் உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும். மரணமாகி விட்டால் அவர் குடும்பத்துக்கு உதவ வேண்டும். புதுமுறை அடுப்புகள், பதநீர் காய்ச்சப் பாத்திரங்கள் கொடுத்து

ஆதரிக்கவேண்டும். காடுகளில் சுள்ளி விறகு பொறுக்கிக்கொள்ள அனுமதி தரவேண்டும்.

பஞ்சாயத்துப் புறம்போக்கு நிலங்களில் தென்னை நடுவது போல பனங்கொட்டைகளையும் போடும்படி உத்திரவாக வேண்டும். ஏனென்றால் இங்குள்ள பனைகளெல்லாம், ஓடு செய்யவும், செங்கல் சுடவும், விறகுக்கும் வெட்டப்படுகின்றன. காப்பி, டீகடைகள் பெருகுவதுபோல பதநீர் ஸ்டால்கள் பெருக வேண்டும். இவற்றைத் துரிதமாகச் செய்ய சம்மேளனத் தலைவரவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். 'பனைச் செல்வம்' பத்திரிகை வெகு அபிவிருத்தியடைந்திருப்பதைப் பாராட்டுவதோடு, இவ்வளவு துரித முன்னேற்றம் கண்ட தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

உணவுப் பொருள்கள் கெடாமல் இருக்கப் புது வழி

உணவுப் பொருள்களை கெடாமல் பல நாட்கள் பாதுகாக்க வழி ஏற்படும் பட்சத்தில் உணவு பிரச்சினை பாதி தீர்ந்தது என்றே சொல்லலாம். இதற்கான வழியொன்று மேற்கு ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. கோலோனில் அமைக்கப்பட்டுள்ள 'எலெக்டிரானிக் ரேடியேஷன்' சாதனம் கிருமிகளை அகற்றி சுத்தப்படுத்தும் பணியை வெகு துரிதமாகச் செய்து வருகிறது. உணவுப் பொருள்களை இதில் வைத்துப் பயன்படுத்துவதை மேற்கு ஜெர்மனியில் இப்போது சட்டமூலம் தடுத்துள்ளது என்றாலும் வெகு சீக்கிரமே இம்மாதிரி பயன்படுத்தி அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்குள்ள லேபோல்ட் கம்பெனியார் கிருமியகற்றும் (ஸ்டியரிலைசேஷன்) சாதனம் ஒன்றை நிர்மாணித்திருக்கின்றனர். இதைப் பார்வையிட பொது ஜனங்கள் அனுமதிக்கப்பட்டனர். பல பௌதிக நிபுணர்கள் இந்த சாதனம் எப்படி இயங்குகிறது என்பதை விளக்கிக் கூறினர்.

ஒரு மணி நேரத்திற்குள் 30,000 முதல் 40,000 ஸிரிஞ்ஜ்கள் வரை சுத்தப்படுத்தப்படுகின்றன. மற்றொரு சௌகரியம் இந்தக் கருவிகள் வைத்துள்ள பெட்டிகளிலிருந்து வெளியில் எடுக்காமல் சுத்தப்படுத்த முடியும். நான்கு டன் எடையுள்ள பெரியப் பொருள்களையும் 'கிரேன்கள்' உதவியுடன் "ரேடியேஷன்" சேம்பருக்கு எடுத்துச் சென்று சுத்தப்படுத்த முடியும்.

இந்தப் புது சாதனத்தை அமைக்க சுமார் 10 லட்சம் ஜெர்மன் மார்க்குகள் செலவாகியுள்ளன. ஐரோப்பாவிலேயே இந்த மாதிரி நவீன சாதனம் வேறெங்குமில்லை. அரசாங்க உதவி எதுவுமின்றி தனியார் துறை முயற்சியாலேயே இது நிறுவப்பட்டது. இந்த சாதனத்தின் உதவிகொண்டு பிளாஸ்டிக் 'கேபிள்'களின் 'ரெஸிஸ்டென்ஸ்' சக்தியும் அதிகரிக்க முடியுமாம். ரப்பர் பொருள்கள் செய்வதற்கும் இந்த சாதனம் பயன்படுத்த முடியும்.

இந்த சாதனங்களில் வைத்து எடுக்கப்பட்ட பொருள்கள் எளிதில் கெடுவதில். யுனைடெட் ஸ்டேட்ஸில் இந்த சாதனம் மூலம் கதிர்கள் வீசப்பட்ட உணவுப் பொருள்களை மக்கள் உபயோகித்து வருகிறார்கள். ரஷ்யாவிலும், கனடாவிலும் இந்த சாதனம் மூலம் பயன்படுத்தப்பட்ட உருளைக் கிழங்குகளை உபயோகிக்கிறார்கள். உருளைக்கிழங்குகள் எவ்வளவு நாளானாலும் கெடாமல் இருப்பதுடன் அப்போதுதான் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டதுபோல இருக்கிறதாம். எவ்வளவு காலமானாலும் அவைகளிலிருந்து முளை கிளம்புவதில்லையாம்.

உணவுப் பொருள்கள் கெடாமல் இருக்க ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. உணவுப் பண்டங்களை இனி எலெக்டிரானிக் முறையில் பதப்படுத்தி எவ்வளவு நாட்களானாலும் கெடாமல் வைத்து இனி உபயோகிக்க முடியும்.

சங்கச் செய்திகள்

சேர்வைகாரன்பட்டி (கடையம்) கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

1. சங்கம் பதிவு செய்யப்பட்ட தேதி ... 8—1—1949
2. சங்கம் ஆரம்பிக்கப்பட்ட தேதி ... 11—1—1949
3. சங்கத்தின் சுருக்க வரலாறு ... லைசென்ஸ் மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது திருநெல்வேலி ஜில்லா கருப்பட்டி சங்கத்திலிருந்து பங்குத் தொகைக் கடனாக ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டது. அதை வைத்து பதநீர் உற்பத்தியாளருக்குக் கடன் கொடுத்து அவர்களிடமிருந்து கருப்பட்டி வாங்கப்படுகிறது.
4. உறுப்பினர்களின் எண்ணிக்கை ... 293
5. கடந்த மூன்றுண்டுகளில் பதநீர் இறக்க அனுமதி பெற்றவர்கள் ... 1961-ல் — 280; 1962-ல் — 285; 1963-ல் — 270
6. பதநீர் இறக்க பயன்பட்ட மரங்களின் எண்ணிக்கை ... 11,200
7. இறக்கிய பதநீர் அளவு ... சங்கத்தில் இல்லை
8. பனைவெல்லம் உற்பத்தி ... சங்கத்தில் இல்லை
   கற்கண்டு ... இல்லை
   பனஞ்சீனி ... இல்லை

★ ★ ★

கெட்டிச்செவியூர் கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

1—4—1963 முதல் 30—9—1963 வரை சங்கத்தின் மூலம் விற்பனை செய்த கருப்பட்டி, சர்க்கரை கணக்கு விவரம் வருமாறு:—

சங்க ஆரம்ப தேதி	...	20—1—1947
சங்கம் பதிவு செய்த தேதி	...	23—4—1947
மெம்பர்கள் எண்ணிக்கை	...	413
பங்குத் தொகை	...	ரூ. 2,310=00

1962—63 P. L. நெ. 239; 1963—64 C. L. நெ. 135; கருப்பட்டி எடை மனு 13,715 கிலோ 9; விலை ரூ. 1.02,060=59. பனஞ்சர்க்கரை கிலோ 104; கிராம் 550; விலை ரூ. 197=63.

நீங்கள் கேட்டவை...?

[வாசகர்களின் வினாக்கள் பனைத்தொழில் பற்றியதாகவே இருத்தல்வேண்டும். வேறு எந்த வினாக்களுக்கும் கண்டிப்பாகப் பதில் தரப்படமாட்டாது—ஆசிரியர்.]

1. திருத்தி அமைக்கப்பட்ட சூனியக் கொப்பரை எங்கு கிடைக்கும்? அதன் கிரயம் என்ன? இதை மின்சாரத்தினால் இயக்கி பனஞ்சீனி உற்பத்தி செய்வதால் கிலோ என்ன விலையாகும்? சோ. ஐம்புலிங்கம், தாயம்பாளையம்.

திருத்தியமைக்கப்பட்ட சூனியக் கொப்பரை கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

The Palmgur Adviser,
Khadi & Village Industries Commission,
Dahanu (P.O.)
Thana (District)
Maharashtra State.

இக்கொப்பரையின் கிரயம் ரூ. 50,000 ஆகும். இதை நிறுவுவதற்கு ரூ. 30,000 செலவாகும். இதில் தயாரிக்கப்படும் பனஞ்சீனி கிலோ ஒன்றுக்கு ரூ. 1—12 நபை. பதநீரின் எடையில் 7 சத விகிதம் முதல் 8 சத விகிதம் பனஞ்சீனி தயாரிக்கலாம்.

* * * *

2. பாடசாலைக் குழந்தைகளுக்குப் பதநீரை அருந்தக் கொடுத்து ஆராய்ச்சி செய்து வருகிறீர்களாமே?

ஆம். இவ்வாராய்ச்சியின் பயனால் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன.

(1) சருமம் பாதுகாக்கப்படுகிறது.
(2) சத்துக்குறை நோய்கள் ஏற்படுவதில்லை.
(3) இரத்த அணுக்கள் வலுவடைகின்றன; வியாதிக் கிருமிகள் உடலைத் தாக்காவண்ணம் பாதுகாக்கும் வண்ணம் ஏற்படுகிறது.
(4) முகப் பொலிவு ஏற்படுகிறது.
(5) சுறுசுறுப்பு உண்டாகிறது.
(6) வாய்ப்புண் குணமாகிறது.
(7) இருதயம் வலுவடைகிறது.

* * * *

3. 'கட்டுப்பாளைப் பதநீர்' என்றால் என்ன?

மார்கழி, தை மாதங்களில் ஆண் பனையில் பாளைகள் தோன்றத் துவங்கும். இப்பாளைகளை மூடியிருக்கும் 'நெட்டு' (Spathe Cover) எனப்படும் தோல்களைக் கிழித்துக் கொண்டு பாளைகள் வெளிவருவதற்கு முன்னர் இடுக்கிப் பதநீர் இறக்குவர். இவ்வாறு சேகரிக்கப்படும் பதநீரில் இனிப்புச் சத்து சற்று குறைவாகவே இருக்கும். இதில் தயாரிக்கப்படும் பனைவெல்லத்தைப் பொதுவாக இருப்பு வைப்பதில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் பொதிப் பருவத்திலிருக்கும் பிஞ்சுப் பாளைகளை இடுக்கி இறக்கப்படும் பதநீருக்குக் கட்டுப்பாளைப் பதநீர் எனலாம்.